முருகப்பெருமான் துணை

**மகான் ஆனாய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அருட்பெருஞ் சுடரான சரவண சோதி
ஆற்றல்மிக்க வழிபாடு தன்னை
அருட்தயவாய் மக்களுக்கு அருளுகின்ற
ஆறுமுக அரங்கமகானை போற்றி
2. போற்றியே குரோதி தகரின் திங்கள்
புகலுவேன் மூவைதிகதி கதிர்வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 15ம் நாள், 28.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
உற்றதொரு துல்லிய ஆசிதனை
உரைத்திடுவேன் ஆனாயநாயனார் யானும்
3. யானும் உலகநலமுற வேண்டியே
உயர்ஞானி அரங்கன் வழியில்
ஞானம் பயின்று மக்களெல்லாம் வர
நம்பகமுற ஞானவான்கள் படை
4. படை உலகெங்கிலும் பெருகி
பாடிடுவேன் வேலவன் வழிபாடு
தடையற எங்கும் நிரம்பியே
தணிகாசலனும் வெளிப்படும் காலம்
5. காலம் சடுதி நிகழ்வாகி
கலியினில் மாற்றம் உண்டாகும்
கோலமதாய் சமூக அக்கறையாக
குறைவிலா ஞானவான் படை
6. படைகளும் பெருகி மாற்றம்
பரோபகாரமாகி பின்பு தரும
படைகளாகி பசிப்பிணி அல்லல்தனை
பாருலகை விட்டு விரட்டியே
7. விரட்டியே வறுமை போராட்டம்என
விதிகூறி நடக்கும் கொடுமைகளும்
விரட்டப்பட்டு சமூக மாற்றமதும்
வேலவன் ஆசிபட உலகம் கண்டு

8. கண்டு எங்கும் எல்லாம் சமம்
கடமையை செய்யவே தடையென
உண்டான அதிகார வர்க்க
ஊழல் செயல்களும் அகற்றப்பட்டு

9. அகற்றப்பட்டு பண்பு மிக்க
அனைவருக்கும் பாதுகாப்பு மிக்க
செகம் போற்றும் சேவைகளாக
செயல்பாடுகளெல்லாம் மாறி

10. மாறியே ஞானப்படைகள் வழி
மக்களெல்லாம் மகிழ்வு அமைதி
ஆறுதல்பட பேசும் படியான
ஆற்றல் மிக்க ஆளுமைகள் தானும்

11. தானுமே அமைந்து உலகில்
தக்க மாற்றம் கண்டிட நேரும்
ஞானதேசிகன் அவதார நோக்கம்வழி
ஞான ஆட்சி காலமாகும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–